# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 04/06/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

கடந்த குத்பாக்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய நற்குறிப்பு எடுத்து வைக்கப்பட்டு வந்தது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடன் அன்னார் கலந்துகொண்ட போர்கள் மற்றும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் பங்கு பெறாத போர்களில் அன்னார் கலந்து கொண்ட போர்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வந்தது. ஹம்ராஉல் அஸது போரைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

உஹது போருக்குப் பிறகு குறைஷியர்கள் மக்காவை நோக்கி புறப்பட்ட போது, வழியில் அவர்களுக்கிடையே, 'இந்த வெற்றியிலிருந்து பயன்பெற்றவாறு மதீனா மீது தாக்குதல் தொடுத்துவிட வேண்டும்' என்ற காரசாரமான விவாதம் ஆரம்பமாகிவிட்டது. ஆவேசமான மக்களின் தூண்டுதலுக்காளான குறைஷிய படை மதீனாவை நோக்கி திரும்புவதற்கு ஆயத்தம் ஆகிவிட்டது. இந்தச் செய்தி கண்ணியத்திற்குரிய ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தபோது, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களையும் ஆலோசனைக்காக அழைத்தார்கள். இருவரும் குறேஷிய படையை எதிர்கொள்ள ஆலோசனை வழங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் உடனடியாக, 'உஹது போரில் கலந்து கொண்ட முஸ்லிம்கள் ஆயத்தம் ஆகிவிடுங்கள்' என்று அறிவிப்பு செய்தார்கள். எனவே உஹதில் காயமுற்ற போர் வீரர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் தம்முடைய எஜமானரின் தலைமையில் புறப்பட்டார்கள். எட்டு மைல் தொலைவைக் கடந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹம்ராஉல் அஸது என்ற இடத்தை அடைந்தார்கள். பல்வேறு இடங்களில் தீ மூட்டுமாறு கட்டளையிட்டார்கள். இரவின் இருளில் ஒளிர்ந்த 500 தீ மூட்டல்கள் தொலைவிலிருந்து பார்ப்பவர்களின் உள்ளங்களை அச்சத்திற்குள்ளாக்கின.

அந்த சந்தர்ப்பத்தின் போதே, குஸாஅஹ் என்ற கோத்திரத்தைச் சார்ந்த மஃபது என்ற பெயருடைய இணைவைப்பாளர்களின் தலைவர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்து உஹது போரில் கொல்லப்பட்டவர்களைக் குறித்து அனுதாபத்தை வெளிப்படுத்தினார். அடுத்த நாள் அவர் அபூ ஸுஃப்யானைச் சந்தித்தார். மேலும் அவருக்கு முஸ்லிம்களின் திட மனதைரியம் குறித்து எச்சரிக்கை செய்தார். மஃபதின் பேச்சால் அபூஸுஃப்யானும் இதர குறைஷியர்களும் எந்த அளவு திகில் அடைந்தார்கள் என்றால் அவர்கள் மக்காவுக்குத் திரும்பிச் செல்வதையே நலம் என கருதினார்கள்.

பனூ முஸ்தலிக் போர் ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு ஷஃபான் மாதத்தில் நடைபெற்றது. அது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹமது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: குறைஷியர்கள் ஏற்படுத்திய குழப்பத்தினால் குஸாஅஹ் கோத்திரத்தின் கிளை கோத்திரமான பனூ முஸ்தலிக் மதீனா மீது போர் தொடுக்க ஆயத்தமாக ஆரம்பித்தது. இந்தச் செய்தி கிடைத்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயத்தம் மேற்கொள்ளுமாறு படைக்குக் கட்டளையிட்டார்கள். எனவே பல சஹாபாக்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையில்

நயவஞ்சகர்களும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். வழியில் நிராகரிப்பாளர்களின் ஓர் ஒற்றன் கிடைத்தான். அவனிடமிருந்து சூழ்நிலையைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அவன் தகவல் கொடுக்க மறுத்து விட்டதால், போரின் விதிமுறைகளின் படி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனைக் கொன்றுவிட்டார்கள்.

பனூ முஸ்தலிக்கின் எண்ணமோ திடீரென்று மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதாக இருந்தது. எனவே அவர்களுக்கு முஸ்லிம்களின் வருகையைப் பற்றிய தகவல் கிடைத்த போது, அவர்கள் மிகவும் அச்சத்திற்குள்ளானார்கள். ஆனால் குறைஷியர்கள் பனூ முஸ்தலிக்குக்கு முஸ்லிம்கள் மீது பகைமை கொள்வதற்கு எந்த அளவு தீய எண்ணத்தை தூண்டி விட்டிருந்தார்கள் எனில், அவர்கள் பிறகும்கூட போரிலிருந்து பின் வாங்கவில்லை. போர் ஆரம்பித்ததும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் அழகிய திட்டத்தின் விளைவால் 10 நிராகரிப்பாளர்கள் மற்றும் ஒரு முஸ்லிம் உயிரிழந்த நிலையில், பனூ முஸ்தலிக் கோத்திரத்தினர் சுற்றிவளைக்கப்பட்டு ஆயுதங்களைக் கீழே போடும் கட்டாயத்திற்கு ஆளானார்கள்.

பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பி வருகையில், முஹாஜிர்களுள் ஒரு மனிதர் ஓர் அன்ஸாரியின் முதுகில் அடித்துவிட்டார். இதனால் இரு சாராரும் தத்தமது கூட்டத்தினரை உதவிக்கு அழைத்தார்கள். இந்தப் பிரச்சனை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் வரை சென்ற போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அதனை வீணான, தீய விஷயம் என்று கூறி பிரச்சனையை முடித்து வைத்து விட்டார்கள். ஆனால் அப்துல்லாஹ் பின் உபை, ‘அவர்களோ இவ்வாறு செய்துவிட்டார்கள்; அதாவது, முஹாஜிர் அன்ஸாரியை அடித்துவிட்டார். ஆனால் நாங்கள் மதீனா திரும்பினால், நிச்சயமாக கண்ணியமிக்க மனிதர் (நவூதுபில்லாஹ்) இழிவான மனிதரை அங்கிருந்து வெளியேற்றி விடுவார்’ என்று கூறினான்.

இதைக் கேட்டதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் உபையைக் கொல்வதற்கு அனுமதி கோரினார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கவில்லை. பிற்காலத்தில் அப்துல்லாஹ் பின் உபையுடைய நயவஞ்சகத்தன்மையும் இஸ்லாத்தின் மீதான பகைமையும் வெளிப்பட்டதும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், ‘ஒருவேளை அப்போது நான் இவனை கொல்ல வைத்திருந்தால், மக்கள் தவறாகப் பேசியிருப்பர். ஆனால் இப்போது அந்த மக்களுக்கே அவனைக் கொல்ல நான் கட்டளையிட்டால், அவர்களே அவனைக் கொன்று விடுவர்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபையுடைய ஜனாஸா தொழுகையை தொழ வைக்க முற்பட்டபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ‘அல்லாஹுத்தஆலா தங்களை நயவஞ்சகர்களின் ஜனாஸா தொழுகை தொழுவதிலிருந்து தடை செய்துள்ளான்’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், ‘அவர்களுக்காக இஸ்திக்ஃபார் செய்வதற்கும் செய்யாமல் இருப்பதற்கும் எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது’ என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அவனது ஜனாஸா தொழுகை தொழ வைத்தார்கள். எனினும், பிற்காலத்தில் அல்லாஹுத்தஆலா முழுவதுமாக தடைசெய்ததற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் நயவஞ்சகர்களின் ஜனாஸா தொழுகை தொழுவதை விட்டுவிட்டார்கள்.

ஹுதைபியா உடன்படிக்கையின் போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை குறைஷியர்களுடைய கண்ணியத்திற்குரிய மக்களிடம் தூது செல்வற்காக அனுப்ப நாடினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய பெயரை பரிந்துரைத்தவாறு, ‘அவர் குறைஷியர்கள் பார்வையில் என்னைவிட கண்ணியத்திற்குரியவராவார்’ என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள்.

ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது, மக்கத்து குறைஷியர்களின் தூதுவனான ஸுஹைலுடைய மகன் அபூ ஜந்தல் சங்கிலிகள் மற்றும் விலங்குகளால் பூட்டப்பட்ட நிலையில் அங்கு வந்து சேர்ந்தார்.

அச்சமயம் ஸுஹைல், ‘மக்காவாசிகளிலிருந்து முஸ்லிம்களிடத்தில் வரும் ஒவ்வொரு மனிதரும் திருப்பி அனுப்பப்பட வேண்டும்’ என்ற நிபந்தனையை எழுத வைத்துக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஸுஹைலிடம், ‘இப்போது இந்த உடன்படிக்கை முழுமையடையவில்லை’ என்று கூறினார்கள். ஆனால் ஸுஹைல் ஏற்றுக்கொள்ளவில்லை. பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், ‘மனிதத்துவம் மற்றும் கருணையின் அடிப்படையில் அபூ ஜந்தலை எங்களுக்கு கொடுத்து விடுங்கள்’ என்று கேட்டார்கள். ஆனால் ஸுஹைல் தெளிவாக மறுத்துவிட்டான். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அபூ ஜந்தலிடம் பொறுமைகாக்குமாறு வலியுறுத்தியவாறு, ‘இறைவ(னின் கருணையி)ன் பால் கவனம் செலுத்துவீராக’ என்று கூறினார்கள். முஸ்லிம்களுக்கு இந்தக் காட்சி மிகவும் வேதனை தரக்கூடியதாக இருந்தது. இறுதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் பொறுக்க முடியவில்லை. அன்னார் நடுங்கிய குரலில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம், ‘தாங்கள் இறைவனின் உண்மையான தூதர் இல்லையா? நமது எதிரி பொய்யில் இல்லையா? பிறகு ஏன் நாம் இந்த இழிவைத் தாங்கி கொள்கிறோம்?’ என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், ‘நான் இறைவனின் தூதராவேன். மேலும் அவனுடைய நாட்டத்தை அறிவேன். அதற்கு மாற்றமாக நான் நடந்து கொள்ள முடியாது’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அறிவுரை கூறியவாறு, ‘உமரே! சுதாரித்துக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடன் கோர்த்துக் கொண்ட உமது கையைத் தளரவிடாதீர்கள்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கலீஃபா ஆவதற்கு முன்பு ஆண்டு மாநாட்டின் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: வேதனை மிகுதியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்திலிருந்து கேள்வியாக வெளிவந்த அந்தக் கூக்குரல் மற்ற பல உள்ளங்களில் பொதிந்து கிடந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை வெளிப்படுத்த துணிந்தது எத்தகைய பிழையாக இருந்ததென்றால், அதற்குப் பிறகு வாழ்நாள் முழுவதும் அவர்கள் அதற்காக வெட்கப்பட்டார்கள். நிறைய நோன்புகள் வைத்தார்கள். அதிக இறைவணக்கங்கள் செய்தார்கள். அதிகதிகமாக தானதர்மங்கள் செய்தார்கள். பாவமன்னிப்புக் கோரிவந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எப்போதும் கவலையுடன், ‘நான் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் அந்தக் கேள்வியை கேட்காமல் இருந்திருக்கலாமே!’ என்றே கூறி வந்தார்கள்.

ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் போது முஸ்லிம்கள் மற்றும் குறைஷியர்கள் இடையே போடப்பட்ட உடன்படிக்கையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கையொப்பமும் இருந்தது. ஹுதைபியாவில் இருந்து திரும்பி வருகையில், அதிகாரம் அல்ஃபத்ஹின் வசனங்கள் இறங்கிய போது, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை வரவழைத்து, எனக்கு உலகின் அனைத்து விஷயங்களை விடவும் அதிக நேசத்திற்குரிய ஓர் அதிகாரம் இப்போது என் மீது இறங்கியது என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ‘இந்த சமாதானம் உண்மையிலேயே இஸ்லாத்தின் வெற்றியா?’ என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், ‘ஆமாம்! நிச்சயமாக இது நமது வெற்றியாகும்’ என்று கூறினார்கள்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய நற்குறிப்பு இனி வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும் என்று கூறிய பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கீழ்வரும் மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்து, அவர்களது ஜனாஸா தொழுகை தொழவைப்பது குறித்து அறிவித்தார்கள்:*

வாழ்க்கையை அர்ப்பணித்த மதிப்பிற்குரிய ஷுஅய்ப் அஹ்மத் ஸாஹிப் அவர்கள். இவர்கள் தர்வேஷ் மர்ஹூம் பஷீர் அஹ்மத் சாஹிப் காலா ஆஃப்கான் அவர்களுடைய மகன் ஆவார்கள். இவர்கள் 56 வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பல்வேறு அமைப்புகளில் பணியாளர் ஆகவும், அதிகாரியாகவும், நாஸிராகவும் தொண்டாற்றி வந்தார்கள். இவர்களுக்கு உலியா

அலுவலகத்தின் இன்சார்ஜ் ஆகவும், பைத்துல்மால் கர்ச்சின் நாஸிர் ஆகவும், வக்ஃபேஜதீத் மாலுடைய நாஸிர் ஆகவும், ஜல்ஸா சாலானாவின் மேலதிகாரியாகவும், இந்திய குத்தாமல் அஹ்மதிய்யாவின் சத்ராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. இவர்களுக்கு இறைவணக்கத்தின் பால் மிகுந்த கவனம் இருந்தது. தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் நஃபில்கள் தொழுவதை முறையாகப் பேணி வந்தார்கள்.

கிலாஃபத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதிலும் உயர்ந்த தரத்தைக் கொண்டிருந்தார்கள். திருக்குர்ஆனின் ஆழிய ஞானம் இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் இயக்கத்தின் கலீஃபாக்களின் நூல்களையும் படித்து வந்தார்கள். மார்க்கஅறிவு மிகவும் விசாலமாக இருந்தது. எல்லாத் தலைப்பிலும் சொற்பொழிவாற்றும் திறமை கொண்டிருந்தார்கள். மிகவும் நல்லொழுக்கம் உடைய மற்றும் நெருங்கிப் பழகக்கூடிய மனிதராக இருந்தார்கள். அனைத்து தரப்பு மக்களிடமும் அன்பு மற்றும் நேசம் கொண்டவராக இருந்தார்கள். தேவையுடையவர்களையும், தமக்குக் கீழே இருப்பவர்களையும் நன்கு கவனித்து வந்தார்கள். காதியானில் உள்ள ஒவ்வொருவரும் இவரை மிகவும் புகழ்கிறார்கள்.

உயர்ந்த மனதைரியம் கொண்டவராகவும் நன்றி செலுத்தக்கூடியவராகவும் இருந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், மனைவி மட்டுமின்றி இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். இவர்கள் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவர் ஜலாலுத்தீன் நய்யர் ஸாஹிப் அவர்களின் மருமகன் ஆவார்கள். அல்லாஹுத்தஆலா மர்ஹூமுடன் மஃபிரத்துடனும் கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களது பிள்ளைகள் மற்றும் மனைவிக்குப் பொறுமை மற்றும் அமைதியினை வழங்குவானாக! மேலும் இவர்கள் செய்த நன்மைகளைத் தொடரும் நல்வாய்ப்பை வழங்குவானாக!

அடுத்தக் குறிப்பு, காதியானிலிருந்த இயக்கத்தின் முபல்லிஃக் மதிப்பிற்குரிய மக்ஸூத் அஹ்மத் சாஹிப் பட்டி அவர்களுடையது. இவர்கள் மே 18, அன்று 52 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூம் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ரஜோரி மாவட்டத்தின் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்கோட்டைச் சார்ந்தவர் ஆவார்கள். இவர்களுடைய தொண்டு காலம் 30 வருடங்கள் ஆகும். இவர்களுக்கு லக்னோ மாநிலத்தின் மண்டல அமீராகவும் ஸ்ரீநகரின் முபல்லிக் இன்சார்ஜ் ஆகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. 2017 ஆம் ஆண்டில் இருந்து வஃபாத் வரை முழுநேர தலைமையக காஸியாக தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது.

கஸாவில் மிகவும் சுறுசுறுப்பாகவும் உள்ளத் தூய்மையுடனும் தமது பணியை செய்து வந்தார்கள். டஜன் கணக்கிலான வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். தம் பொறுப்பில் இருந்த பணிகளைப் பற்றி இவர்களுக்கு மிகவும் கவலை இருந்தது. கடந்த நாட்களில் இவர்களுக்கும் கொரோனா வந்து விட்டிருந்தது. அப்பொழுது, மருத்துவமனையில் கூட பணிகளைப் பற்றிய கவலை இருந்தது. மிகவும் நெருங்கி பழகக்கூடியவரும், நல்லியல்புடையவரும், தைரியசாலியும், விஷயத்தைப் புரியக்கூடியவரும், சுறுசுறுப்பானவரும் ஆவார். மர்ஹூம் வாழ்க்கையை அர்ப்பணித்தவரும் ஆவார்கள். மர்ஹூம் மூஸியாவார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், தாயார், மூன்று சகோதரர்கள் மட்டுமின்றி மனைவியும் மூன்று மகள்களும் உள்ளனர். அல்லாஹுத்தஆலா மர்ஹூமுடன் கருணையுடனும் பாவமன்னிப்புடனும் நடந்து கொள்வானாக! இவர்களுடைய பெண்பிள்ளைகளையும் பாதுகாப்பானாக! இவர்கள் செய்த நன்மைகளைத் தொடரக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக.

*இவர்கள் மட்டுமின்றி, மதிப்பிற்குரிய மலிக் முஹம்மத் யூஃசுப் சாஹிப் அவர்கள், சுருக்கெழுத்துத் துறையின் இன்சார்ஜான, ஃபைஸலாபாத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஜாவித் இக்பால் சாஹிப் அவர்கள் மற்றும் கானாவைச் சேர்ந்த இயக்கத்தின் முரப்பி நவாஸ் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய மதீஹா நவாஸ் ஸாஹிபா அவர்கள் ஆகியோரது நற்குறிப்புகளையும் எடுத்துரைத்து, ஹுஸூர் அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவமன்னிப்பிற்காகவும் உயர்ந்த அந்தஸ்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

**(தமிழாக்கம்: மௌலவி முஹம்மது சுல்தான் மைதீன்)**